


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

மரம் 3 நவம்பர் 2003 கனி 12

ஆசிரியர்
B. அர்ஜூனன்

உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். (நீதிமொழிகள் 3 : 6)

கிறிஸ்துவின் வசனம்



ஜீவனுள்ள வசனம்

விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற பன்னிரண்டாவது வாசகர் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்

# தெரிந்து கொள்ளுங்கள்

## அலெக்சாந்திரியா

-K.R.K. ரவி ஆசீர்

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு உடன் ஊழியராயிருந்த அப்பொல்லோ பிறந்த இப்பட்டணம் மாவீரன் அலெக்ஸாண்டரால் கி.மு.331ல ஸ்தாபிக்கப்பட்டது. இங்கே வான சாஸ்திரிகளின் மாளிகைகள், அருமையான அருங்காட்சியகம், புகழ் வாய்ந்த நூலகம், புத்திசாலிகளான கிரேக்கர்கள், யூதர்கள் மற்றும் எகிப்தியர்கள் இவையனைத்தும் இப்பட்டணத்தை ரோம சாம்ராஜ்யத்தின் பெரும் கலை மற்றும் கலாச்சார மையங்களில் ஒன்றாக்கியது.

பழைய ஏற்பாட்டின் செப்டுவஜன்ட் பதிப்பு (280-170 கி.மு.) அலெக்சாந்திரியா பட்டணத்தில் உருவாக்கப்பட்டது. அதே நூற்றாண்டில் இங்கே ஃபிலோஜுடேயஸ் என்ற புத்திக் கூர்மையும் பக்தியும் நிறைந்த யூதர் ஒருவருடைய எழுத்துக்கள் (செய்திகள்) கண்டறியப்பட்டுள்ளன. இவருடைய எழுத்துக்கள் சில குறிப்பிட்ட விஷயங்களில் இயேசுவுக்கு மிகவும் அன்பாயிருந்த அப்போஸ்தலனாகிய யோவானுடைய செய்திகளுக்கு ஒத்த வகையில் இருந்தன. அரேபியர்கள் கி.பி.641ல் அலெக்சாந்திரியாவைக் கைப்பற்றி அதன் பிரசித்தி பெற்ற அருங்காட்சியகம், விலையுயர்ந்த புத்தகங்களோடே கூட இப்பட்டணத்தின் மாபெரும் நூலகம், கையெழுத்துப் பிரதிகள், பதிவேடுகள் ஆகியவற்றை சுட்டெரித்தனர். கி.பி.1517ல் துருக்கியர்கள் இப்பட்டணத்தை மேற்கொண்டு இதன் மதில்கள், கட்டடங்கள் யாவையும் அழித்துப் போட்டனர். அலெக்சாந்திரியாவின் முந்தைய சிறப்புகள் அனைத்தும் இதனால் மறைந்து போயின.



FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 3 நவம்பர் 2003 கனி 12

ஆசிரியருரை

# ஜீவ வழி
## The Way of Life



நாம் வாழும் இப்பூமியில் பலவிதமான மார்க்கங்கள் தோன்றி சிதைந்து கிடக்கின்றன. எது எப்படியிருந்த போதிலும் ஜீவனுள்ள மார்க்கம் இன்றும் அழியாமல் நிலைத்திருக்கிறது. ஜீவனுள்ளவர்களாகிய நாம் இந்த ஜீவ வழியைப் பற்றி தெரிந்து கொள்வது மிக அவசியமான ஒன்று. இவ்வழியை ஏற்படுத்தியவர் நம்மை உண்டாக்கின தேவனாகிய கர்த்தர் ஆவார்.

தேவன் மனுஷனை தமது சாயலாகவும், தமது ரூபத்தின் படியேயும் உண்டாக்கி அவனை ஒரு இயந்திர மனிதனைப் போல வைக்காமல் தானே யோசித்து தீர்மானம் எடுக்கும் மனோபாவத்தை அவனுக்குக் கொடுத்திருக்கிறார். ஆகையால் அவர் "இதோ, நான் உங்கள் முன்னே ஜீவவழியையும், மரண வழியையும் வைக்கிறேன்" (எரே. 21 : 8) என்றார். இந்த இருவழிகளில் ஒன்றை தேர்ந்தெடுக்க மனிதனுடைய விருப்பத்திற்கு விட்டு விட்டார். இதிலே சிலர் ஜீவவழியையும் பலர் மரண வழியையும் தெரிந்து கொள்கிறார்கள். இவ்வழிகளைக் குறித்து பரிசுத்த வேதாகமம் நமக்கு போதிப்பது என்ன?

தேவனாகிய கர்த்தர் ஜீவ விருட்சத்தையும், நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப் பண்ணி "நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்." (ஆதி.2:17). நம்முடைய ஆதி தகப்பனோ கர்த்தர் கொடுத்த கட்டளையை மீறி பறித்து புசித்து பாவத்துக்குட்பட்டு மரித்தான். இதனால் தேவன் அவனுக்கு வைத்திருந்த ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்க தகுதியற்றவனாகப் போய்விட்டான். ஆகையால் தேவனாகிய கர்த்தர் ஜீவவிருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல் செய்தார். அந்தப்படியே இன்றும் கோடானகோடி ஜனங்கள் ஜீவவழியைக் குறித்து கேள்விப்பட்டும் அதைக் குறித்து

தெரிந்து கொள்ள முற்படாமல் பார்வைக்கு இன்பமாயிருக்கும் மரணவழியையே தெரிந்து கொண்டு வெற்றி நடைபோடுகிறார்கள் அதன் முடிவோ மரணம்.

உலகத்தில் எத்தனையோ விதமான மார்க்கங்கள் தோன்றினாலும் அவைகளெல்லாம் ஜீவனுள்ள மார்க்கங்கள் அல்ல ஏனென்றால் அவைகள் முதலும் முடிவுமில்லாமல் இருக்கும். சில பட்டணங்களில் நீங்கள் பயணம் செய்யும் போது முட்டுத் தெருவைப் பார்த்து இருப்பீர்கள் அதனுடைய வழி தொடராமல் முட்டி நிற்கும் அதிலே போகிறவர்கள் முட்டி திரும்புவார்கள். இதைப் போன்ற மார்க்கங்கள் நம் சமுதாயத்தில் அநேகமுண்டு. ஜீவனுள்ள மார்க்கம் ஒன்றே ஒன்று தான். அதை நாம் வேதாகமத்தின் துணை கொண்டு அறிந்து கொள்கிறோம். ஜீவ வழியை பிரித்து படித்தால் ஜீவன் + வழி = ஜீவ வழி. இம் மார்க்கம் ஜீவனுள்ளவர்களை பட்டியலிட்டு காட்டுகிறது. அது கதையல்ல, நாம் வாழும் இப்பூமியிலே உலக தோற்ற முதல் இயேசு கிறிஸ்து வரை குறிப்பாக 76 தலைமுறைகளை சுவிசேஷகர் லூக்கா பட்டியலிட்டு காட்டுகிறார். இந்த ஜீவ வழியில் வந்தவர்கள் தேவாதி தேவனை ஆராதித்தவர்கள். "பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன் இந்தக் கடைசி நாட்களில் குமாரன் (இயேசு) மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" (எபி.1 : 1, 2) இன்று நீங்களும் நானும் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சந்ததியாகிய, ஒரே குடும்பமாக, தேவனுடைய மந்தையாக கூட்டப்பட்டு வருவோம். கிறிஸ்துவானவர் "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா.14: 6) என்றார். இவரை விசுவாசித்து பற்றிக் கொண்டால் இரட்சிப்பு "உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்." (யோவா.11: 26). ஆதாம் எச்சரிப்பின் கட்டளையை ஏற்றுக் கொள்ளாமல் பாவத்திலே மரித்தான். இன்று உயிரோடிருக்கிற நாம் அவரை விசுவாசத்தின் மூலம் ஏற்றுக் கொண்டு கீழ்ப்படிவதால் மரணம் நம்மை ஆட்கொள்ளாது. மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு ஜீவனுக்குட்பட்டவர்களாவோம்.

"ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" (மத்.7:14). ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் அதன் வழி நெருக்கமுமாயிருக்கிறபடியினாலே இன்றைய திருச்சபைகளில் ஆத்துமாக்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது. இந்தியாவின் ஜனத்தொகை 100 கோடியை தாண்டிவிட்டது! இருந்த போதிலும் ஜீவனுள்ள மார்க்கத்தில் இருப்பவர்கள் குறைவாகவே இருக்கின்றனர். அதிலும் இதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர் என்கிறார். அந்த சிலரில் ஒருவராக நீங்கள் இருக்க வேண்டும். கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்; ஆகையால் அதிக கூட்டத்தைப் பார்த்து ஏமாந்து போய் விடாதீர்கள்.

ஒருவன் இயேசுவைப் பார்த்து "நல்ல போதகரே நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மை செய்ய வேண்டும் என்று கேட்டான்.. அதற்கு இயேசு கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக; உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பவைகளையே என்றார். அந்த வாலிபன் அவரை நோக்கி : இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக் கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான் அதற்கு இயேசு : நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால் போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது, பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்த படியால், இந்த வார்த்தையைக் கேட்ட பொழுது துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான்" (மத். 19 : 16-22). இந்த மனிதனைப் போல சிலர் ஜீவ வழியில் நடக்க விரும்பியும் கட்டளைகளையும், கற்பனைகளையும், தள்ளிவிட்டு பாரம்பரியங்களை எடுத்துக் கொண்டு தங்களுக்குத் தாங்களே போதகர்களாக மாறிக் கொண்டு கர்த்தரையும் அவருடைய வழியையும் அசட்டை செய்கின்றனர்.

"புத்திமதிகளைக் காத்துக் கொள்ளுகிறவன் ஜீவ வழியில் இருக்கிறான்" (நீதி.10: 17) என்ற வசனத்தின்படி வேதாகமம் சுட்டிக் காட்டும் தவறான வழிகளை விட்டு விலகி தன்னைக் காத்துக் கொள்ளுகிறவன் ஜீவ வழியில் இருப்பான். "மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாயிருக்கும்" (நீதி.12 : 15) ஆனால் அதன் முடிவோ மரணம். மேலும் "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" (நீதி.14 : 12) என்கிறார் சாலொமோன் ஞானி. ஒருவரும் கெட்டுப் போவது பிதாவின் சித்தமல்ல எல்லோரும் மனந்திரும்பி இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார். எந்த பெற்றோரும் தன் பிள்ளை கெட்டுப் போகட்டும் என்று விரும்ப மாட்டார்கள். அதைக் காட்டிலும் அன்பு செலுத்தும் நாம் தேவன் நலமானவைகளையே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். அவர் ஒரே ஒரு வழியையே ஏற்படுத்தியிருக்கிறார். அது பூர்வபாதையாயிருக்கிறது, ஜீவ வழியாயும் இருக்கிறது.

முதல் நூற்றாண்டு காலத்தில் "தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான் ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்து போனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி அவமாய்ப் போனார்கள்(அப்.5:36). அவனுக்குப் பின்பு யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்து போனான்; அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள்" (அப்.5 : 37). இப்படி அநேகர் தங்களைப் பின்பற்றும்படி புதிய புதிய மார்க்கங்களை ஏற்படுத்தினார்கள். அவையெல்லாம் ஒன்றுமில்லாமற் போயிற்று. மனமிருந்தால் மார்க்கமுண்டு என்பார்கள். அநேகருக்கு பணமிருந்தால் போதும் மார்க்கம் தானாய் வந்து விடும்

என்ற எண்ணம்! இவ்விஷயத்தில் "பிலேயாம் கூலிக்காக செய்த வஞ்சகத்திலே விரைந்தோடினான்" (யூதா. 11). கர்த்தர் தம்முடைய தூதனைக் கொண்டு அவனை தடுத்தார், அவனோ தன்னுடைய கழுதையின் மேல் பயணம் செய்து கொண்டிருந் தான். அப்பொழுது தன் வழியைத் தடுத்த தூதனை அறியாது கழுதையை மூன்று முறையும் அடைத்தான். பின்பு பேசாத மிருகம் மனுஷர் பாஷையை பேசி அவனுடைய மதிகேட்டைத் தடுத்தது. அநேகர் இந்த பிலேயாமைப் போலவும், மார்க்கந் தப்பி அலைகிற நட்சத்திரங்களைப் போலவும் இருக்கிறார்கள்.

சரி, ஜீவ வழியைப் பற்றி பேசுகிறீர்களே அதனால் நமக்கு ஏதாவது நன்மை உண்டா என்று நீங்கள் கேட்கக் கூடும். ஆம் பிரியமானவர்களே, நன்மை ஏராளம் உண்டு. இயேசு சொல்வதைப் பாருங்கள் : நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான். அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்" (யோவா.10 : 9). நீங்களும் நானும் இப்புவியிலே இயேசுவின் வழியாக செல்லாமல் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க முடியாது ஊசியின் மீது ஏறி நீங்கள் தவம் செய்தாலும், அல்லது எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி தவம் செய்தாலும் வாசலாகிய அவர் வழியாய் உட்பிரவேசித்தால் மட்டுமே இரட்சிக்கப்பட்டு உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைய முடியும். அதாவது ஆசீர்வாதமாக திருப்தியுள்ளவர்களாக இருக்க முடியும். அதுமட்டுமல்ல வெளிப்படுத்தின விசேஷ புஸ்தகத்திலே குறிப்பிட்டுள்ள ஏழு சபைகளுக்கு எழுதும் போது ஒவ்வொரு சபைக்கும் ஒவ்வொரு வித்தியாசமான ஆசீர்வாதங்களை தருவதாக வாக்களிக்கிறார். எபேசு சபைக்கு எழுதும் போது ஜீவ விருச்சத்தை கொடுப்பதாகவும், சிமிர்னா சபைக்கு எழுதும் போது ஜீவ கிரீடத்தை தருவதாகவும், பெர்கமு சபைக்கு எழுதும் போது விடிவெள்ளி நட்சத்திரத்தை கொடுப்பதாகவும், சர்தை சபைக்கு எழுதும் போது வெண் வஸ்திரம் தரிப்பிப்பதாகவும், பிலதெல்பியா சபைக்கு எழுதும் போது தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவதாகவும், லவோதிக்கேயா சபைக்கு எழுதும் போது தன்னுடைய சிங்காசனத்தில் தன்னோடே கூட உட்காரும் படிக்கு அருள் செய்வதாகவும், வாக்கு பண்ணியிருக்கிறார். இந்த முழுமையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள "ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிற நீங்கள் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடமற்றவர்களுமா யிருக்கும் படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்." (பிலி.2 : 14, 16).

ஜீவ வழியிலே நடப்பவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் செய்த வாக்குதத்தமாயிருக்கிறது. கர்த்தர் சொல்லியும் செய்யா திருப்பதற்கு அவர் மனுஷர் அல்ல. ஆகையால் பிரியமான சகோதரனே சகோதரியே இவ்விஷயத்தில் நீங்கள் மற்றவர்களை பாராது ஜீவ வழியே நடக்க பிரயாசப் படுங்கள்."அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமா யிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்" (வெளி.22 : 11, 12) என்று திருவுளம் பற்றுகிறார். "நீதியின் பாதையில் ஜீவன் உண்டு; அந்தப் பாதையில் மரணம் இல்லை" (நீதி.12:28).

# நாங்கள் தவறிழைத்து விட்டோம் என நான் அனுமானிக்கிறேன்

**I Guess we were Wrong** - *J.C. Choate*

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் கொரியாவில் ஒரு மதஅமைப்பு கிறிஸ்து ஒரு குறிப்பிட்ட தேதியில் மீண்டும் பூமிக்கு வரப் போகிறார் என பிரசங்கிக்கத் தொடங்கியது. இந்தக் குழு புதுதில்லியில் ஒரு அலுவலகத்தைக் கொண்டிருந்தது, இதைப் போல் உலகம் முழுவதிலுமுள்ள மற்ற நகரங்களிலும் அலுவலகத்தைக் கொண்டிருந்தது, இவர்களுடைய முக்கிய வேலை கர்த்தருடைய வருகையின் நாளை மக்களுக்கு இலக்கிய அறிவிப்பின் மூலம் செல்வதை அணைத்துப் போடுவதேயாகும். புதுதில்லியிலுள்ள ஒரு சுவிசேஷ பிரசங்கியாராகிய சன்னிடேவிட் அவர்களோடு பேசும்படிக்கு அவர்களுடைய உள்ளூர் அலுவலகத்திற்குச் சென்றார், ஆனால் அங்கே அந்த மக்களிடமிருந்து அதிகமான விஷயங்களைப் பெறுவது இவருக்குக் கடினமாகக் காணப்பட்டது. அவர் ஒருநாள் அல்லது கிறிஸ்துவின் வருகைக்காக முன்னேற்பாடு செய்திருந்த அந்த நாளுக்கு முன் இரண்டாவது முறை அவர்களை போய் பார்க்கச் சென்றார், ஆனால் அவர் அந்த அலுவலகம் காலிசெய்யப்பட்டு பூட்டியிருக்கக் கண்டார். அந்த பகுதியில் சிலர், கொரியர்கள் கிறிஸ்து திரும்ப வரும் போது தாங்கள் தங்களுடைய நாட்டில் இருக்க விருப்பம் கொண்டவர்களாக தங்களுடைய தேசத்திற்கு சென்று விட்டார்கள் என அவரிடம் கூறினார்கள். உண்மையாக அவர்கள் கிறிஸ்துவின் வருகைக்காக முன்னேற்பாடு செய்திருந்த அந்த நாளில் கர்த்தர் வரவில்லை. இந்நாளிலும் அவர் வரவில்லை. ஆனால் அதன் பிறகு காவலர் கொரியாவில் அந்த தலைவனின் வீட்டிற்கு அவனை கைது செய்யும்படி சென்றார், அவனுடைய வியாக்கியானம், "நல்லது, நாங்கள் தவறிழைத்து விட்டோம் என நான் அனுமானிக்கிறேன்" எனக் கூறியதாக செய்தித் தாளில் வாசித்தோம்.

ஆனால் கொரியாவிலுள்ள காவலர் ஏன் இந்த மனிதனை கைது செய்தார்? ஏனென்றால் அவன் கர்த்தருடைய வருகைக்கு நாளைக் குறித்து மேலும் பலர் தங்களுடைய பணம், சொத்து இன்னும் பலவற்றை, கர்த்தருடைய வருகைக்குப் பின் அவர்களுக்குத் தேவைப்படாது என்பதனால் அவைகளை அந்த மனிதனுக்கு கொடுத்தவர்களிடமிருந்து பெரும் செல்வத்தை திரட்டிக் கொண்டான்! ஆனால் கேள்வி என்னவென்றால், அந்த ஜனங்களோடு அவனுக்கு என்ன அவசியம் இருந்திருக்கும்? ஏன் அந்த ஜனங்கள் அந்த சொத்துக்கள் அனைத்தையும் அவனுக்குக் கொடுக்கும் படிக்கு மிக முட்டாளாக இருந்திருக்கின்றார்கள்? என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை உணரும் படிக்கு அவர்கள் ஞானமுள்ளவர்களாய் இருந்திருப்பார்கள் என நீங்கள் நினைப்பீர்கள்.

நாம் இது மாதிரி கதைகளை பல முறை கேள்விப்பட்டிருக்கிறோம். பல வருடங்களுக்கு முன் கொழும்பு மற்றும் ஸ்ரீலங்காவிலுள்ள யெகோவா சாட்சி பிரசங்கியாருடன் பேசி, அவன் அந்த வருடத்திற்கான தன்னுடைய குழந்தைகளை

பள்ளிக்கு அனுப்பாமலும் அவனுடைய வரிகளை செலுத்தாமலுமிருந்தான் என அறிந்து கொண்டேன். இயேசு இவ்வாண்டுக்குள் வருகின்றார், ஆன படியினால் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை, தன்னுடைய வரிகளை செலுத்த வேண்டிய அவசியமுமில்லை, உலகிலுள்ள ஒவ்வொன்றும் முடிவுக்கு வரப்போகிறது என்ற காரணம் கூறப்பட்டது. அந்த மனிதனுடைய மற்றும் அவனை போலுள்ள மற்றவர்களின் முட்டாள்தனம் எப்பேர்பட்டது! அவன் கர்த்தருடைய வருகைக்கான நாளை குறிப்பிட்டிருந்த அந்நாளில் கர்த்தர் வராத பின்பு அவன் என்ன செய்தான் என்பது குறித்து நான் ஆச்சரியப்பட்டேன்! நிச்சயம், அவனுடைய குழந்தைகள் அவ்வாண்டு பள்ளிக் கல்வியை இழந்தார்கள், அவன் தன்னுடைய வரிகளைக் கட்ட வேண்டியவனானான்!

இவை கர்த்தர் மறுபடியும் வரமாட்டார் என்று சொல்லுவதாக இல்லை, ஏனென்றால் கர்த்தர் தம்முடைய வசனத்தில் தாம் ஒரு நாள் மறுபடியும் வருவார் எனக் கூறியிருக்கிறார். ஒரு விஷயம் என்னவென்றால், அவருடைய வருகைக்கான நாளைக் குறிப்பது மனிதனுக்கு மதிகெட்ட செயலாகும். இருந்த போதிலும் கிறிஸ்து தாமே மறுபடியும் வருவேன் என வாக்களித்திருக்கிறார். (யோவா.14 : 1-4), தம்முடைய வருகையின் நாழிகையை குறித்து, அவர், "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்", (மத்.24 : 32) என்றார். கிறிஸ்து என்ன சொன்னார் எனக் கவனித்தீர்களா? அந்த நாளை அவர்கூட அறியவில்லை, தூதர்களும் அறியார்கள், ஆனால் பரலோகத்திலுள்ள பிதா ஒருவரே அறிவார் என்று சொன்னார். இப்போது கர்த்தருடைய கூற்று உண்மையாயிருக்குமானால், எந்த ஒரு மனிதனும் இதை அறிவதெப்படி? மேலும் எந்த ஒரு மனிதனும் அவருடைய வருகையின் நாளை குறிப்பிடும் படிக்கு மதியீனனாய் இருப்பது எப்படி? நீங்கள் இதை சிவப்பு மையினால் குறித்து வைத்துக் கொள்ளுங்கள் : **யாராது ஒருவர் கிறிஸ்து மறுபடியும் வரும் நாளை அறிவிக்கிற போது, அவன் தானே, தான் ஒரு மோசம் போக்குகிறவன் என அறிவித்து கொண்டிருக்கிறான், மேலும் அவனுடைய நோக்கம் வஞ்சிக்கிறதும், வேதாகமத்தைக் கற்றறியாது அவனுக்கு செவி சாய்க்க விரும்புகின்ற மக்களை ஏமாற்றுவதுமே ஆகும்.**

மனிதர்கள், தாங்கள் கர்த்தருடைய வருகைக்கான நாளை நோக்கி முன்னேற வேண்டும் என்ற எண்ணத்துடன் பல வருடங்களாகவே கவனத்தை ஈர்க்கின்றவர்களாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். சில காரணங்களுக்காக அவர்கள் கர்த்தர் அந்த அறிவிப்பினை வேதாகமத்தில் கண்டுபிடிக்கும் படி பிரசங்கம் மற்றும் எண்களின் வடிவத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார் என நினைக்கிறார்கள். இது தேவன் மனிதனோடு ஒரு விளையாட்டு விளையாடிக் கொண்டிருப்பது போல, அதாவது அவர் அந்த நாளை வேதத்தில் எங்கோ மறைத்து வைத்திருக்கிறார் என்பது போலவும், மனிதனிடத்தில் இதை ஊகித்துப் பார்க்க, நன்றாக யோசித்துப் பார்க்க விட்டு விட்டது போலவும், அதை வெளிப்படுத்த இசைவாயுள்ளதை படம் பிடித்துக் காட்ட முயற்சிக்கிறது போலவும் இருக்கிறது. ஆனால் அது மிகவும் மதியீனமான ஒன்று. இயேசு தாமே தம்முடைய வருகையை அறிந்திருந்தால் ஏன் பிதா ஒருவரே அந்த

நாழிகையை அறிவார் எனக் கூற விரும்புவார். மேலும் சில சமர்த்தியமான மனிதர் அதை விடுவிக்கும் படிக்கு அந்த நாளை வேதாகமத்தில் ஏதோவொரு இடத்தில் எழுதி வைத்திருப்பாரே?

தேவன் மறுபடியும் இயேசு எப்போது வருவார் என்பதை நாம் அறிந்து கொள்ள விரும்பியிருந்தால், நமக்கு வெளிப்படையாகவும், தெளிவாகவும் சொல்லியிருக்க மாட்டாரா?


பேதுரு, "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம்; பூதங்கள் வெந்து உருகிப்போம்; பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போம்" (2 பேது. 3: 10) என எச்சரிக்கிறார்.

இயேசு ஒரு திருடன் அல்ல, ஆனால் அவர் ஒரு திருடனைப் போல் வருவார், அதாவது, வருகையை அறிவிக்காத நேரத்தில் வருவார்.

பின்பு பவுல், கிறிஸ்துவை விசுவாசியாதவர்களுக்கும் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் ஆக்கினையை செலுத்தும் படிக்கு கர்த்தர் வருகின்றார் எனக் கூறுகிறார் (2 தெச.1 : 7 - 9). இப் பாடங்களிலிருந்து அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் இன்றோ, நாளையோ, அடுத்த வருடமோ, இன்றிலிருந்து ஒரு நூறு ஆண்டுகளோ, ஓராயிரம் ஆண்டுகளோ கழித்தோ அல்லது எப்பொழுதோ அவரை சந்திக்க நாம் ஆயத்தமுடையவர்களாயிருக்க வேண்டும் என்பதே. கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம் போலவும் ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்று அறியுங்கள். (2 பேது. 3: 8).

நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறீர்களா? (மாற்.16 : 16). அவருடைய வருகையில் அவரை சந்திக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா?


விரைவில் எதிர்பாருங்கள்




தமிழில் ஒரு வழி

தபால்வழி பாடத்திட்டம்
MASTER COURSE

பரிசுத்த வேதாகமத்தை முறையாக கற்று நீங்கள் இரட்சிக்கப்பட அருமையான பாடத்திட்டம்

இந்தியாவில் நீங்கள் எப்பகுதியிலிருந்தாலும் இதில் சேர்ந்து படிக்கலாம் ஆண்/பெண் இருபாலரும், குறைந்த பட்ச வயது 20 மேலும் விபரமறிய அடுத்த இதழை எதிர்பாருங்கள். அதன் பின் சேர்ந்து பயன்பெறுங்கள்.

தவறான தீர்மானங்கள் - நித்திய விளைவுகள்
Wrong Decisions - Eternal Consequences

# தேவன் எனக்குத் தேவையில்லை
# I Don't Need God

பெண்கள் பகுதி

Betty Burton Choate



நாம் வாழ்கின்ற இந்த சமயசார்பற்ற உலகில், "சமயம் தேவையற்றது. சமய வினாக்களைக் குறித்த ஆராய்ச்சியினால் என் மனதைச் சங்கடப்படுத்த மாட்டேன்" என தீர்மானம் எடுக்கின்ற ஜனங்கள் அநேகர்.

சமயம் என்பது பாரம்பரியங்களுக்கு அடிமைப்பட்டுள்ள ஜனங்களின் ஒருவழிமுறை, மதகுருவுக்குரிய அமைப்புகள், சமய சம்பந்தமான கஜானாக்களுக்குள் தசம பாகங்களை செலுத்துதல், மற்றும் சமய கட்டுக் கதைகளைக் காட்டிலும் அநேகமாக ஒன்றுமில்லாதிருக்கும் ஒரு பிற்கால வாழ்வுக்கான ஆயத்தம் என தவறான கருத்து இருக்கலாம். அவ்வகையான குற்றச்சாட்டுகள் உண்மையாக இருக்குமானால், பிறகு சமயம் என்பது தேவையற்ற ஒன்றுமட்டுமல்ல, ஆனால் ஜனங்கள் இவ்வித சங்கிலிகளினால் கட்டப்பட்டிராமல் நலமுடனிருப்பார்கள்.

ஆம்,மேலும், சமயக் கேள்விக்கு இரு பக்கங்கள் இருக்கின்றன; தேவன் தம்மை நேசிக்கும்படி மனிதனோடு ஒரு உறவினையும், மேலும் மனிதருடைய நன்மைக்காக அவருடைய வழிநடத்துதலையும், அந்த உறவு அவர் உலகத்திற்கு கொடுத்த சமயப் புத்தகத்தோடு கட்டப்பட்டிருப்பதற்கென்றும் திட்டமிட்டார். எப்படியோ சாத்தானும் கூட வழிநடத்துதலுக்கென்ற மனிதனுடைய தேவையை உணருகிறான், எனவே தேவனை அறிந்து கொள்ளாத படிக்கும், ஜனங்களை குழப்பும் படிக்கும் அவன் போலியான உருவங்களை உண்டாக்கியிருக்கிறான்.

இன்று ஜனங்கள் உலகிலுள்ள வேறுபட்ட மதங்களை - கிறிஸ்தவம், யூத சமயம், இந்து சமயம், பௌத்த சமயம், இஸ்லாமிய சமயம், டாவோயிஸம், ஜோராஸ்டேரியனிசம், கத்தோலிக்க சமயம், பிராட்டஸ்டண்டு சமயம் - போன்றவற்றைக் காண்கையில் எதைப் பின்பற்றுவது என தெரிந்து கொள்ளுதலானது முழுவதும் நசுக்கப்படுகின்றது. ஒவ்வொரு சமயமும் வித்தியாசமான தெய்வத்தையும் வித்தியாசமான நீதிநெறிகளையும், வித்தியாசமான ஆராதனை முறைமைகளையும், ஒருவனுடைய பாவத்திற்கான பிராயச்சித்தத்திற்கு வித்தியாசமான வழியையும் காட்டுகிறது. ஒரு மனிதன் எந்த மார்க்கம் உண்மையாகவே தேவனிடத்திலிருந்து வந்திருக்கின்றது என்றும் எது சத்தியத்தை மறைக்கும் படிக்கு சாத்தானால் போலியாக உண்டாக்கப்பட்டது என்றும் எவ்வாறு அறியக் கூடும்?

அலட்சியமான அல்லது குழப்பமான ஒரு மனோநிலையில், அநேக ஜனங்கள் தேவன் தங்களுக்குத் தேவையில்லை என தீர்மானிக்கின்றனர். அவர்கள் ஒரு சமய சார்பற்ற உலகில் சமயசார்பற்ற வாழ்க்கை வாழ்வோம் சமயத்தை மறப்போம் என தீர்மானம் செய்கின்றனர்.

இது சரியான தெரிந்தெடுத்தலா? தேவனற்ற ஒரு சமுதாயமும் தேவனற்ற ஒரு வாழ்க்கையும் தேவ ஞானத்தினால் வடிவமைக்கப்பட்டிருப்பதைக் காட்டிலும் சிறப்பானதாயிருக்கிறதா?

நாத்திகத்தின் முயற்சிகளையும், நம்பிக்கைகளையும் பார்ப்பதின் மூலம், முழு உலகத்தாலும் இது பின்பற்றப்படுமானால் இந்த மிதமிஞ்சிய தெரிந்து கொள்ளுதல் எதைக் கொண்டு வரும் என்பதை நாம் கண்டு கொள்ளலாம். நாத்திகம் என்பது தேவனற்ற கட்டுப்பாடுகளற்ற ஒரு சமய அமைப்பாகும். இது மனிதாபிமானத்தைத் தவிர வேறொன்றும் பெரியதல்லவென்றும், வாழ்க்கை ஒழுங்குக்கடுத்த அனைத்தையும் தீர்மானிக்க மனிதாபிமானத்திற்கு உரிமையுண்டு என்றும் கூறுகிறது.

நாத்திகத்தின் இலக்கு என்ன? அவர்களுடைய அறிக்கையின் படி, உண்மையான "சரி" மற்றும் "தவறு"என்பதில்லை, சத்தியத்தில் "பூரணமானவைகள்" இல்லை, நீதி, கண்ணியம், மனிதரிடையேயான ஐக்கியங்கள், அல்லது ஒரு வீட்டை மற்றும் திருமணத்தை எது நியமிக்கிறது என்பவைகள் சம்பந்தமான விதிமுறைகள் இல்லை. நாத்திகர்கள் பொய்யையும், ஏமாற்றுதலையும் ஆதரிப்பார்கள் - இச்செயல்கள் ஒருவனுடைய தனிப்பட்ட "லாபம்" ஆக இருக்குமானால்; அவர்கள் கருச்சிதைவு செய்வதை (சிசுக் கொலை) வெளிப்படையாக ஆதரிக்கிறார்கள், மேலும் வேதனையின்றி இறக்க செய்தல் (முதியோரை, வியாதியஸ்தரை அல்லது மனதில் அல்லது சரீரத்தில் ஊனமுள்ளவரை கொலை செய்தல்); சுயபுணர்ச்சி கொள்ளுதல் (பால் உறவு, ஆண்கள் ஆண்களோடு அல்லது பெண்கள் பெண்களோடு), திருமண உறவு வைத்துக் கொள்ளத் தகாதவரோடு பாலுறவு கொள்ளுதல், (நெருங்கிய அண்ணன், தங்கை, அக்கா, தம்பி போன்ற குடும்ப அங்கத்தினர்களோடு பாலுறவு கொள்ளுதல்), அல்லது சிறுகுழந்தைகளோடு பாலுறவு கொள்ளுதல் (சிறுகுழந்தைகளைப் பலாத்காரம் பண்ணுதல்) போன்ற இப்படிப்பட்ட நடக்கையை ஒருவன் தெரிவு செய்கிறவனானால், உறவு அல்லது விவாகரத்து அல்லது சுயபுணர்ச்சி "திருமணங்களில்" நிலைத்திருக்கிறான். சுருக்கமாக கூறினால், அவர்கள் இப்படிப்பட்ட காரியத்தை பாவமாக கருதுவதில்லை மேலும் ஏதேனும் ஒரு நடக்கை அனுமதிக்கப்படக் கூடியதாயிருக்கிறது.

உண்மையாகவே, நீதிமொழிகள் 14 : 12ல் கூறியுள்ளது போல் : "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்." இந்த பழக்கப்பட்ட "உரிமைகள்"க்கு இலக்கான யாரேனும் ஒருவர் அவைகள் எவ்வளவு கேவலமான தீமை நிறைந்ததும் தவறானதும் என அறிகின்றனர். முழு உலகமும் இவைகளைக் கட்டுப்படுத்தாமல் பயிற்சிக்குமானால், துன்மார்க்கமும் அழிவுமான சேற்றிலே நாம் வாழுவோம்.

"மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" (எரே.10:23). தங்களுடைய வாழ்நாளெல்லாம் தேவனுடைய ஆளுகையில்லாமல் வாழ விரும்புகிறவர்களின் துணிச்சலான கூற்றுக்கு எதிரிடையான, உண்மையானது, "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது, கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும் போது மரணத்தைப் பிறப்பிக்கும்" (யாக்.1: 14, 15) என்பதாகும்.

ஆனபடியினால், தேவனுடைய வார்த்தையில் அவருடைய வழிநடத்துதல்கள், ஆத்துமாவின் நித்திய ஆயத்தத்திற்காக மட்டுமல்ல, ஆனால் நம்முடைய பாதுகாப்பிற்கும், இவ்வுலகில் வாழ்கின்ற நாம் நலமுடன் வாழ்வதற்கும் அவைகள் தேவையாயிருக்கின்றது. தேவன் நமக்கு தேவை. நம்முடைய வாழ்வினை வடிவமைப்பதில் அவருடைய ஞானமும் வழிநடத்துதலும் நமக்குத் தேவை. நாம் புதிய ஏற்பாட்டினை ஆழமாக ஆராய்வோமானால் நம்முடைய முடிவான நன்மைக்காக தேவன் நம்மிடம் எதுவும் கேட்கிறவரல்ல என உணர்ந்து கொள்ளுவோம் மேலும் அவர் நமக்கு இறுதியான தீமை எதுவோ அதை மட்டும் தடுக்கிறார். ஏனென்றால் அவர் தம்முடைய சிருஷ்டியை நேசிக்கிறார். ஒரு தகப்பன் தன் குழந்தைகளுக்கு உதவுகிறது போல அவர் நம்மை வழிநடத்தவும், பாதுகாக்கவும் நம்மேல் வாஞ்சையாயிருக்கிறார்.

தேவன் உனக்குத் தேவையில்லை என தவறான தீர்மானத்தை வகுத்திருக்கிறாயா? அப்படியென்றால், இந்த சரீரபிரகாரமான வாழ்விலும் கூட உனக்காக சேர்த்து வைக்கப்பட்டுள்ள தவிர்க்க முடியாத பிரச்சனைகளோடும் மனவேதனைகளோடும் நித்திய அழிவுக்குச் செல்லும் சாலையில் நீ பயணம் செய்து கொண்டிருக்கிறாய். திரும்பிச் செல், இந்த கேள்வியை மறு-ஆய்வு செய். உன்னுடைய அனுதின வாழ்வில் தேவன் உன்னுடைய தகப்பனாகவும், வழிகாட்டியாகவும் இருக்கும் படிக்கு அவரை அனுமதிக்க தீர்மானம் செய்.

- தமிழில் குளோரி அர்ஜுனன்

## பொது அறிவுக் களஞ்சியம்

### முதன்மைகள்

முதன் முதலில் செயற்கை கோள் அனுப்பிய நாடு - **ருஷ்யா**

முதன் முதலில் இந்தியாவில் செய்தித்தாளை தோற்றுவித்தவர் - **ஜேம்ஸ்கிக்கி**

முதன் முதலில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தவர் - **டென்சிங்**

முதன் முதலில் சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயர் வழங்கப்பட்ட இடம் - **அந்தியோகியா**

முதன் முதலில் கிறிஸ்துவின் சபை துவங்கப்பட்ட இடம் - **எருசலேம்**

# வீர மரணத்தை அடைந்தவர்கள்

P.R. சாமி

"மரணம்" மனுமக்களை அச்சுறுத்தும் காரியமாக இருந்த போதிலும், மரணம் என்ற பாலத்தை கடந்தே மனிதன் நித்தியத்துக்குள்ளாக பிரவேசிக்கக் கூடும். ஏனெனில் மரணத்தோடு நம் அத்தியாயம் முடிந்து விடுவதில்லை. நித்தியத்தின் ஆரம்பமே இங்கு தான். மரணத்தை கண்டு கலக்கமடையாதவர்கள் யாரும் இருக்க முடியாது. படித்தவர், பாமரமக்கள், ஏழை, பணக்காரன், வாலிபர், வயோதிகர், யாவரும் மரணத்தை ஒரு நாள் சந்தித்தேயாக வேண்டும். யாரும் இதற்கு விதிவிலக்கு கிடையாது. ஆதிமனிதன் "ஆதாம்" செய்த பாவத்தின் பிரதிபலனால் உலகத்தில் "மரணம்" வரத் தலைப்பட்டது என்று திருமறை உரைக்கின்றது.

எவ்வளவு காலம் இவ்வுலகில் வாழ்கிறோம் என்பதல்ல பிரச்சனை. எவ்வாறு ஜீவிக்கிறோம் என்பது தான் முக்கியம். பழைய ஏற்பாட்டில் மூன்று பெரிய மூதாதையர்களைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்கள். இவர்கள் எப்படி மரணத்தை சந்தித்தார்கள். எந்தவித மனோநோக்குடன் இவ்வுலகில் ஜீவித்தார்கள் என்பதைப் பற்றி இன்று பார்ப்போம். ஆபிரகாம் உயிரோடிருந்த ஆயுசு நாட்கள் 175 வருஷம். இவற்றில் ஒரு குறிப்பிட்ட காலம் எகிப்தில் சஞ்சரித்ததை தவிர பெரும்பாலான காலத்தை கானான் தேசத்தில் கழித்தான்.

இப்புவியில் வாழும் காலத்தின் உச்ச கட்டத்தை ஒரு மனிதன் அடைகிற போது, கடந்து போன வாழ்க்கையை திரும்பி பார்ப்பான். ஆபிரகாம், நன்றாக, சந்தோஷமாக தன் நாட்களை நடத்தி வந்திருக்கிறான். தன் குமாரர்களையும், பேரக் குழந்தைகளையும் பெற்று பெரு வாழ்வு வாழ்ந்திருக்கிறான். அந்த தேசக் குடிகளின் நன் மதிப்பையும், தேவனுடைய அங்கீகாரத்தையும் பெற்றவனாக ஜீவித்திருக்கிறான் பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ என்ற ஆசீர்வாதத்திற்கு பாத்திரனாக விளங்கியிருக்கிறான். ஆபிரகாமுடைய ஜீவியத்தின் முக்கிய பகுதியைப் பற்றி ஆதியாகமம் 11-ம் அதிகாரம் முதல் 25-ம் அதிகாரம் வரை சொல்லப்பட்டிருப்பதை வேதத்தில் வாசிக்கலாம். ஆபிராம் என்பது அவனுடைய முதல் பெயர். அதன் பொருள் "உயர்த்தப்பட்ட தகப்பன்" என்பதாம். பிறகு அந்த பெயர் மாற்றப்பட்டு, "ஆபிரகாம்" என்றழைக்கப்பட்டான். அதற்கு, "திரளான ஜாதிகளுக்கு தகப்பன்" என்று அர்த்தமாம்.

ஆபிரகாம், தேராகுவின் குமாரன். நோவாவின் காலத்திலிருந்து 10 வம்சங்கள் தள்ளி, "சேம்" வம்சவழியாக வந்தவன். நாகோர் ஆரான் என்ற இரண்டு உடன் பிறப்புகள் அவனுக்கு இருந்தனர். அவன் மனைவி சாராள். அவனுக்கு ஒன்று விட்ட சகோதரி முறை. இவர்கள் இருவருக்கும் தேராகு என்பவனே தகப்பன். ஆனால் இவரது தாய்கள் வெவ்வேறு நபர்கள். கல்தேய நாட்டிலுள்ள ஊர் என்னும் தேசத்தில் பிறந்தான். தான் 25-வது வயது வாலிபனாக இருந்த போதே தேவன் கொடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டு, கானான் தேசத்துக்கு சென்று வாழ்ந்து வந்தான். உன் வித்தின் மூலமாக, பூமியிலுள்ள சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் அவனுக்கு வாக்குத் தத்தம் பண்ணி இருந்தார்.

ஆபிரகாம் அந்நாளைய மக்கள் சேவித்த தேவர்கள் என்று சொல்லப்பட்டவர்களை ஆராதனை செய்யவில்லை. மாறாக, ஒன்றான மெய் தேவனாகிய சிருஷ்டி கர்த்தாவை மட்டும் வழிபட்டு வந்தான். ஆபிரகாம் ஒரு நல்ல மனிதன். ஆனால் ஒரு தவறும் செய்யாத பூரணபட்டவன் அல்ல. ஒரு முறை பஞ்சம் வந்த போது, ஆபிரகாம் தன் மனைவி சாராளுடன் எகிப்து தேசத்திற்குப் போயிருந்தான். எகிப்தின் மன்னன் பார்வோன் சாராளை பறித்துக் கொண்டிருப்பான். தக்க சமயத்தில், சாராள் தன் மனைவி என்று கூறாமல், ஒன்று விட்ட சகோதரி என்று கூறி, பார்வோனை ஏமாற்றப் பார்த்தான். ஆபிரகாமுடைய மந்தை மேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டான போது "நீ இடதுபுறம் போனால் நான் வலதுபுறம் போகிறேன்" என்று சொல்லி அவனை விட்டு பிரிந்து போனான் ஆபிரகாம். லோத்தையும், சோதோம் கொமோரா மக்களையும் கொள்ளையிட்ட ஐந்து ராஜாக்கள் கொண்ட கூட்டணியை முறியடிக்கும் முயற்சியில் அந்நாளைய ராஜாக்களுக்கு ஒரு தலைவனாக விளங்கினான். தேவன் ஆபிரகாமுக்கு, அவன் சுதந்தரித்து கொள்ளப் போகும் தேசத்தைப் பற்றிய வாக்குவாதத்தை புதுப்பித்தார். சந்ததி வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தும், சாராளுக்கு குழந்தை இல்லாமலிருந்தது. உடனே பொறுமை இழந்து, தன் அடிமை பெண்ணாகிய ஆகாரை கொடுக்க, ஆபிரகாம் அவளை மனைவியாக்கிக் கொண்டான்.

ஆபிரகாமுக்கும் பிரச்சனைகள் இல்லாமல் இருந்ததில்லை. பெலிஸ்திய ராஜா அபிமலேக்கு சாராளை பற்றிக் கொண்டிருப்பான். ஆனால் தக்க சமயத்தில் தேவன் ராஜாவை எச்சரித்தார். ஒரு குமாரனையும் பெற்றெடுத்தாள். ஆனால் சாராள், ஆகார் இருவரும் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். குடும்ப பிரச்சனையைச் சமாளிக்க, ஆகாரையும், அவள் குமாரன் இஸ்மவேலயும் வீட்டை விட்டு வெளியேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு ஏற்பட்டது.

ஆபிரகாமின் வாழ்க்கையில் ஏற்பட்ட மிகப்பெரிய சோதனை, தன் வம்ச விளக்கு, ஒரே பிரிய குமாரன் ஈசாக்கை பலியிடும்படி தேவன் சொன்னார். ஒரு பதிலும் பேசாமல், தேவனுடைய கட்டளைக்கு கீழ் படிந்து, அந்த பரீட்சையில் வெற்றி பெற்றான். "விசுவாசிகளின் தந்தை" என்றும், "தேவனுடைய சிநேகிதன்" என்றும் பாராட்டப்பட்டான். பழைய ஏற்பாட்டு குணாதிசயங்களைப் பற்றி பேசப்படும் போது, புதிய ஏற்பாட்டில் ஆபிரகாமின் பெயர் சொல்லப்படாமல் இருந்ததில்லை. சுமார் 72 தடவை குறிக்கப்பட்டிருக்கிறது. பவுலும், எல்லா கிறிஸ்தவர்களும் ஆவிக்குரிய நிலையில் ஆபிரகாமின் சந்ததியே என்றார். ஏனெனில் அவனைப் போலொத்த விசுவாசம் கிறிஸ்தவர்களுக்கும் இருப்பதால், நீதிமானாகிய, தரித்திரன் லாசரு மரித்து, ஆபிரகாமின் மடியில் இருந்ததாக இயேசு குறிப்பிட்டார்.

ஆபிரகாமும் ஒரு சிந்தனையாளன். தர்க்கிக்கத் தெரிந்தவன். இருப்பினும் மனித தர்க்க சாஸ்திரத்திற்கு மேலானது தான் அவன் தேவனிடத்தில் கொண்டிருந்த விசுவாசம். சிந்திக்கத் தெரிந்த எவனும், இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, அவர் சிலுவையிலறையப்பட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதை விசுவாசிக்க வேண்டும்.

தேவன் கட்டளையிட்ட எதையும், தயங்காமல் உடனே கீழ்படியக் கூடிய அளவிற்கு விசுவாசம் உடையவனாக ஆபிரகாம் இருந்தான். ஆகவே தான் நல்ல முறையில், மகிழ்ச்சியுடன் நிறைவான வாழ்வை வாழ்ந்திருக்கிறான். அவன் எங்கு

வாழ்ந்தாலும் அங்குள்ள மக்களுக்கு ஆசீர்வாதமாக இருந்திருக்கிறான். நல்ல முதிர் வயது வரை வாழ்ந்து மரித்தான். பிறருக்கு இடறல் உண்டாக்கிக் கொண்டு, துன்பம், சோகம் இவற்றால் தன் ஜீவியம், அந்தகாரப்பட விட்டு விட்டிருந்தால் அவன் அவ்வாறு அழைக்கப்பட்டிருக்க மாட்டான்.

ஆபிரகாம் நல்ல நரைவயதிலும் முதிர்ந்த பூரண ஆயுசிலும் பிராணன் போய் மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான் என்று பரிசுத்த வேதம் கூறுகிறது. ஈசாக்கு, யாக்கோபு மெசபடோமியாவிலிருந்து திரும்பிய பிறகு 20 வருடத்திற்கு மேல் வாழ்ந்திருக்கிறான். யாக்கோபு எப்ரானுக்கு வந்து தன் தகப்பன் ஈசாக்கு மரிக்கும் வரை அவனோடே 12 வருடம் வாழ்ந்திருந்தான். ஈசாக்கு விருத்தாப்பியமும் பூரண ஆயுசுமுள்ளவனாகி, 108 வருஷம் ஜீவித்திருந்து, பிராணன் போய் மரித்து தன் இனத்தாரோடே சேர்க்கப்பட்டான். ஈசாக்கின் வாழ்வில் அவ்வளவு போற்றத்தக்க சம்பவங்கள் வருவதில்லை. இருப்பினும் ஒரு நல்ல முற்பிதாவாக இருந்தான். 40 வயதில் அழகிய ரெபெக்காளை மணந்தான். முற்பிதாக்களில் ஒரு மனைவியையுடையவனாக இருந்தவன் ஈசாக்கு ஒருவன் தான். அவன் வாழ்க்கையிலும் துன்பம் இல்லாமலிருந்ததில்லை. அதிலும் தன்னுடைய இரட்டைப் பிள்ளைகளிடையே இருந்த பகையின் நிமித்தம் பட்டபாடு சொல்லி முடியாது. மற்றவர்களால் அவனுக்கு ஏற்பட்ட பிரச்சனைகளும் உண்டு. அவன் விவசாயம் செய்து, பெரிய பணக்காரனானதை கண்டு அவர்கள் பொறாமை கொண்டு, மிகவும் தொல்லை கொடுத்தனர். இருப்பினும் ஈசாக்கும் ஒரு வல்லவனாக வாழ்ந்தான். சமாதானத்திற்காக தனிப்பட்ட உரிமையைக் கூட விட்டு கொடுத்தான்.

ஆபிரகாம், ஈசாக்கை, காட்டிலும், யாக்கோபின் வாழ்க்கையில் பல பல பிரச்சனைகள் வந்தது. நிச்சயமில்லாத நிலைவேறு. யாக்கோபு ஒரு கூடாரவாசி. தாய் அவனை அதிகம் நேசித்தாள். வெகு தந்திரமாக தன் சகோரன் சேஷ்ட புத்திரபாகத்தை, பிறப்புரிமையை ஏசாவினிடத்திலிருந்து பறித்து கொண்டவன். ஏசா அவனை பழிவாங்க முயற்சிக்கும் போது தப்பித்து ஓடிப் போனான். பிறகு எப்படியோ மாமன் லாபானின் குமாரத்திகளையும், அவர்கள் பணிவிடைக்காரிகளையும் மணந்து கொண்டான். இவன் உழைத்து மாமனுடைய சொத்தை விருத்தி செய்தான். பிறகு திரும்பி வந்து தன் சகோதரன் ஏசாவுடன் ஒப்புரவானான். யாக்கோபும் மரித்து தன் ஜனத்தார்ரோடே சேர்க்கப்பட்டான் என்று வேதம் கூறுகிறது. அப்படி என்றால் மரணம் இவர்களுக்கு முடிவாக இருக்கவில்லை.

அன்புள்ள வானொலி நண்பனே, மரணத்திற்குப் பிறகு நாம் ஒன்றும் செய்ய இயலாது. மனந்திரும்ப கடைசி தருணம் முடிந்து விடும். மரணத்துக்குப் பின் நித்திய ஜீவன் உண்டு. இவ்வுலகில் எப்படி ஜீவிக்கிறோமோ, அதைப் பொறுத்தே நாம் நம் நித்தியத்தை பரலோகத்திலா அல்லது நரகத்திலா, எங்கு கழிப்போம் என்பது நிச்சயிக்கப்படுகிறது. எல்லாரும் ஒருதரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்பு அடைவதும், நமக்கு தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறது. "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள். அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள். அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்" என்று வோதத்தில் வாசிக்கிறேம்.

கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்தவர்கள் தான் கர்த்தருக்குள் மரிக்கிற ஆசீர்வாதத்தை பெறுவார்கள்.

சிறுவர் பகுதி

# தயவு செய்ய நினைத்த தாவீதுக்கு தீமை செய்த ஆனூன்

வேத பகுதி : 1 நாளாகமம் 19:1—19

அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய நாகாஸ் மரித்த பின்பு அவன் குமாரன் ஆனூன் ராஜாவானான். நாகாஸ் உயிரோடிருக்கும் போது தாவீதுக்கு அநேக நன்மை செய்தான். இதை மனதில் கொண்டு தாவீது ராஜா நாகாஸின் குமாரனாகிய ஆனூனுக்கு தயை செய்ய நினைத்து அவன் தகப்பனுக்காக ஆறுதல் சொல்ல தன்னுடைய ஸ்தானாபதிகளை அனுப்பினான். அவர்கள் அங்கு சென்றவுடன் அங்குள்ள சில விஷமிகள் என்ன செய்தார்களென்று தெரியுமா? அனூனைப் பார்த்து, தாவீது ஆறுதல் சொல்லுகிறவர்களை உம்மிடத்தில் அனுப்பினது, உம்முடைய தகப்பனைக் கனம் பண்ணுகிறதாய் உமக்குத் தோன்றுகிறதோ? அப்படியல்ல அவர்கள் தேசத்தை ஆராயவும், அதைக் கவிழ்த்துப் போடவும், உளவு பார்க்கவும் அல்லவோ வந்தார்கள் என்று சொல்லி அவனை நம்ப வைத்தார்கள்.

இதைக் கேட்ட புத்தியற்ற ஆனூன்ராஜா தாவீதின் ஊழியக்காரரைப் பிடித்து, அவர்கள் தாடியைச் சிறைத்து, அவர்களுடைய வஸ்திரங்களை இருப்பிட மட்டும் வைத்து விட்டு, மற்றப் பாதியைக் கத்தரித்துப் போட்டு, அவர்களை அரைகுறையாக அப்படியே அனுப்பி விட்டான். அவர்களோ அசிங்கப்பட்டுப் போனார்கள். ஆனூன் செய்ததை தாவீது கேள்விப்பட்டு அந்த மனுஷர்கள் தாடி வளருமட்டும் எரிகோவில் இருக்க கட்டளையிட்டான்.

பின்னும் ஆனூன் தாவீதோடு யுத்தம் பண்ண சீரியரின் தேசத்திலிருந்து இரதங்களும், குதிரை வீரரும் கூலிக்கு வரும்படி ஆயிரம் தாலந்து வெள்ளியை அனுப்பி முப்பத்தீராயிரம் இரதங்களையும், ஜனங்களையும் கூலிப்படையாக அழைத்தான். இவர்கள் வந்து தாவீதுக்கு எதிராக நின்றார்கள். இதை அறிந்த தாவீது யோவாபையும், பலசாலிகள் இராணுவம் முழுவதையும் அனுப்பினான். யோவாப் கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக என்று சொல்லி யுத்தத்துக்குப் போனான். அம்மோன் புத்திரரும் புறப்பட்டு வந்து தாவீதுக்கு எதிராக அணிவகுத்தார்கள். யோவாப் ஞானமாய் இஸ்ரவேலிலே தெரிந்து கொள்ளப்பட்ட அனைவரிலும் ஒரு பங்கைப் பிரித்தெடுத்து சீரியருக்கு எதிராகவும், மற்ற ஜனத்தை அம்மோன் புத்திரருக்கு எதிராகவும் நிறுத்தி சீரியரையும் அம்மோனியரையும் முறியடித்தான். சீரியர் இஸ்ரவேலுக்கு முன்பாக முறியடிக்கப்பட்டதை சேவகர்கள் கண்ட போது தாவீதோடே சமாதானம் பண்ணி அவனைச் சேவித்தார்கள். அதன் பின்பு அம்மோன் புத்திரருக்கு உதவி செய்ய மனதில்லாதிருந்தார்கள்.

தாவீது ஆனூனுக்கு நன்மை செய்ய நினைத்தான். ஆனூனோ தன் பிரபுக்களின் பேச்சைக் கேட்டு தாவீதுக்கு விரோதியானான். இதைப் போலத் தான் நாம் சிலருக்கு நன்மை செய்ய நினைப்போம். அவர்களோ அதை தவறாக கேள்விப்பட்டு நமக்கே விரோதிகளாக மாறிவிடுவார்கள்.

நான் படிக்கிற காலத்தில் என் நண்பனை பள்ளிக்கு சில சமயங்களில் சைக்கிளில் ஏற்றி வருவேன். அவனோ சில தீய நண்பர்களின் பேச்சைக் கேட்டு எனது சைக்கிளை ஒரு நாள் திருடி விற்றுவிட்டான். நான் தலைமை ஆசிரியரிடம் சொன்னேன் அவர் யார் திருடியது என்று கேட்டார். எனக்கு தெரியாது என்றேன். அவர் உடனே போலீஸ் நிலையத்தில் ஒரு கம்ப்லைன்ட் கொடுக்க சொன்னார். அந்தப்படியே கொடுத்து விட்டு ஆறு மாத காலம் கால்நடையாய் பள்ளிக்கு வந்தேன். அப்பொழுது இந்த நபர்கள் எல்லாம் என்னைப் பார்த்து கேலி செய்து சிரித்தனர் பின்பு தான் திருடியது யார் என்று எனக்கு தெரிய வந்தது. நானோ இயேசுவை அறியா பருவத்திலும் கஸ்தூரி பாய் என்ற எனது டீச்சரின் ஆலோசனைப்படி கர்த்தர் சமூகத்தில் விட்டு விட்டேன். கர்த்தர் அற்புதமாக போலீஸ் ஸ்டேஷன் மூலம் எனக்கு மீண்டும் சைக்கிள் கிடைக்கச் செய்தார். அவர்கள் எனக்கு தீமை செய்ய நினைத்தார்கள். கர்த்தரோ யோவாப் சொல்வதைப் போல கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்தார். உங்களுக்கும் செய்வார் ஆகையால் நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாதிருங்கள்.

## மனப்பாட வசனம்

"தயையும் சத்தியமும் ராஜாவைக் காக்கும்; தயையினாலே தன்" சிங்காசனத்தை நிற்கப் பண்ணுவான்" (நீதிமொழிகள் 20 : 28)

## யார் வேதாகமத்தை வாசிக்க வேண்டும்?

| | | |
|---|---|---|
| வாலிபன் | - | எப்படி வாழ்வது என கற்றுக்கொள்ள |
| வயதானவர் | - | எப்படி மரிப்பது என தெரிந்துகொள்ள |
| அறியாதவர் | - | ஞானத்திற்காக |
| கற்றவர் | - | தாழ்மைக்காக |
| பணக்காரர் | - | இரக்கம் செய்வதற்காக |
| ஏழை | - | ஆறுதலடைவதற்காக |
| பெலவீனர் | - | பெலனடைவதற்காக |
| பலமுள்ளவர் | - | வழிகாட்டுவதற்காக |
| அகந்தையுள்ளவர் | - | எச்சரிப்புக்காக |
| தாழ்மையுள்ளவர் | - | உயர்த்தப்படுவதற்காக |
| துயரப்படுகிறவர் | - | சமாதானத்திற்காக |
| களைப்படைந்தவர் | - | ஓய்வுக்காக |
| சந்தேகப்படுபவர் | - | நம்பிக்கைக்காக |
| பாவி | - | இரட்சிப்புக்காக |
| கிறிஸ்தவர் | - | போதிப்பதற்காக |



- Selected

# அன்பு கூருதல்

J. David Williams

- சென்ற மாதத் தொடர்ச்சி

## 4. சபையில் அன்பு கூரவேண்டும் :-



மேலும் நாம் சபையிலும் அன்பு கூர வேண்டும். ஏனெனில் கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கின்றார் என பவுல் அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறதை, நாம் பார்க்கின்றோம். மேலும், சரீரம் ஒன்று அதற்கு அவயங்கள் அநேகம். ஒரே சரீரத்தின் அவயங்களெல்லாம், அனேகமாயிருந்தும் சரீரம் ஒன்றாகவே இருக்கின்றது. அந்த பிரகாரமாகவே கிறிஸ்துவும் இருக்கின்றார். 1 கொரி 12 : 12ல் நம்மை சபையின் அவயங்களுக்கு ஒப்பிடுகின்றார். இந்த அதிகாரம் முழுவதும் வாசிப்போமானால், அவயங்களின் முக்கியத்துவத்தையும் அவைகள் ஒன்றுக்கொன்று உதவுவது போல நாமும், சபையில் ஒருவரில் ஒருவர் அன்புகூர்ந்து ஒருவரை ஒருவர் தாங்க வேண்டும் என சொல்லப்பட்டிருக்கின்றதை கவனிக்கின்றோம். சரீரத்தில் பிரிவினையுண்டாயிராமல் அவயவங்கள் ஒன்றை குறித்து ஒன்று கவலையாயிருக்கும் படிக்கு தேவன் கனத்தில் குறைவுள்ளதிற்கு அதிக கனத்தைக் கொடுத்து இப்படி சரீரத்தை அமைத்து இருக்கின்றார் என்ற இந்த வாக்கியம், சபையில் மனமேட்டிமையினாலும், முதன்மையினாலும், அதிகாரங்களினாலும், நமக்குள் சரீரத்தை அமைத்த வண்ணம் நம்மில் ஒற்றுமை விளங்க வேண்டும்; அன்பு பெருக வேண்டும் என கேட்கின்றார். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாகவும், தனிதனியே அவயங்களுமாயும் இருக்கின்றீர்கள் என பவுல் அப்போஸ்தலன் கூறியுள்ளார். ( 1 கொரி 12 : 27) இன்னமும் கூட நாம், எபேசியர் 1 : 22 : 23ல் தேவன் நம்முடைய கர்த்தராகிய இயேசுவை எல்லாவற்றையும், எல்லாவற்றிலும், நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு தலையாக தந்தருளினார் என சொல்லியிருப்பதை பார்க்கின்றோம். எவ்வளவு உன்னதமான வசனம் இது. அன்பு, அடக்கம், மனத்தாழ்வு, சகோதரனில் அன்பு கூருதல் இன்னும் தேவனின் கட்டளைகட்கு கீழ்ப்படிதல் எல்லாவற்றையும், எல்லாவற்றிலும், நிரப்புகின்ற பரிபூரணப்பட்ட, நிறைவுபட்ட, சபைக்கு தான் அவரை தலையாக தந்தருளினார். தவிர மார்க்க பேதமும், அன்பற்றவர்களும், பிரிவினைகளும் இருக்கின்ற சபை எந்த சபையானாலும், அதற்கு கிறிஸ்து தலையாக இருக்க மாட்டார். எப்படியும், நம்மில் ஒவ்வொருவரும், தன்னில் அன்பு கூருவது போல, தன் மனைவியிடத்திலும் அன்பு கூருவான். மனைவியும், புருஷனில் பயபக்தியாய் இருப்பாள். இந்த இரகசியம் பெரியது என பவுல் நம்மிடம் குடும்ப அன்பை பகிர்ந்து கொள்கின்றார். அது என்னவெனில், கிறிஸ்து மணவாளனாகவும், சபை மணவாட்டியாகவும், நமக்கு காண்பிக்கின்றார். கணவன் மனைவியிடத்தில் அன்பு கூருகிறான், இயேசு சபையில், (மனைவி) அன்பு கூருகின்றார், ஆக நாம்,

அவரில் (மணவாளனில்) பக்தியாயிருக்க வேண்டும். எபே.5 : 31-33. ஆசியா நாட்டிலுள்ள சபையார், கொரிந்துவிலுள்ள சபையாரை வாழ்த்துகின்றார்கள். ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும், தங்கள் வீட்டில் கூடுகின்ற சபையோடே கூட கொரிந்து சபையை வாழ்த்துகிறதை பார்க்கின்றோம். சபைக்கு சபை வாழ்த்து சொல்வது, சபையின் வளர்ச்சியைக் குறித்து திட்டமிடுவது சபையிலே அன்பு கூருவதற்கு ஒப்பாகும். ஏனெனில் ஒருவன் கர்த்தராகிய இயேசுவில் அன்பு கூராமல் போனால், அவன் சபிக்கப்பட்டவன், என 1 கொரி. 16 : 22ல் வாசிக்கின்றோம். ரோமர் 16ம் அதிகாரம் முழுவதிலும் நாம் சபைகளின் வாழ்த்துகளை பார்க்கின்றோம். ஒவ்வொருவரும் எப்படி சபையில் அன்பு கூர்ந்து வாழ்த்துக்களை சொல்லி கொள்ளுகிறார்கள் என்றும் பார்க்கின்றோம். சபையிலே ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள் என்கிறார் ஆக இதை வாசிக்கும் நண்பனே, சகோதரனே கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார் என கூறி சபையில் அன்பு கூருங்கள். தேவன் சபையில் நாட்டமுடையவர்களை (அன்பு கூருகிறவர்களை) அதிகமாய் ஆசீர்வதிப்பவர்.

## 5. தேவன் நம்மில் அன்பு கூருவார் (யோ.3 : 16)

தேவன் நம்மிடத்தில் அன்பு கூருவார். நாம் தேவனிடத்தில் அன்பு கூரும் போதும், சகோதரனில் அன்பு கூரும் போதும், பிறனில் அன்பு கூரும் போதும், சபையில் அன்பு கூரும் போதும் நம் பிதாவாகிய தேவன், நம்மில் அதிகமாய் அன்பு கூருவார் என்பது அதிக நிச்சயமல்லவா, அவர் நம்மில் அன்பு கூரும் போது நாம் தேவனுடைய பிள்ளைகள் எனப்படுவோம். நாம் தேவனுடைய பிள்ளைகள் என அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்கு பாராட்டின அன்பு எவ்வளவு பெரியதென்று பாருங்கள். 1 : யோ 3 : 1 அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும், நம்மை ஆசீர்வதித்திருக்கின்றார். அவருக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர் களுமாய் இருப்பதற்கு அவர் உலக தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்து கொண்டார். அவருடைய கிருபையின் ஐஸ்வர்யத்தின் படியே நாம் அவருக்கு சுவீகார புத்திரராக்கி, நம்மை இயேசுவின், விலையேறப் பெற்ற இரத்தத்தினால் கழுவி நம்மை பாவத்தில் இருந்து மீட்டிருக்கின்றார். எபே.1 : 6, 7 ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு நம்மை தகுதியுள்ளவராக்கினார், நம்மை இருளின் அந்தகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினார். கொலோ : 1 : 12, 13, அவரில் அன்பு கூரும்படி எவரை முன்னறிந்தாரோ அவர்களை தம்முடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்க முன்னறிவித்திருக்கின்றார். எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்தும் இருக்கின்றார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியிருக்கின்றார். எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கின்றார். நாம் அவரில் அன்பு கூரும் போது நமக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களைப் பார்க்கின்றோம். இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்வோம். தேவன் நம் பட்சத்தில் இருப்பதனால் நமக்கு விரோதமாய் நிற்பவன் யார்? ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். என பேதுரு நம்மை வருந்தி கேட்டுக் கொள்கின்றார் 1 பேதுரு 5 : 6 மேலும்,

சகோதரரே உங்களின் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். இவைகளை செய்வீர்களானால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை என மீண்டும் நமக்கு புத்தி புகட்டுகின்றார், 1 பேது. 1: 10. ஆகவே அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கின்றான். அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கின்றார் என்று 1 யோ.4:7,8ல் பார்க்கும் பிரகாரம், அன்பில் முக்கியத்துவத்தையும், நாம் எப்படி அன்பு கூர வேண்டும் என்றும், எவைகளில் அன்பு கூர வேண்டும் என்றும் கர்த்தருடைய திருவசனங்களில் நாம் தியானித்தோம். மேலும், நாம், உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும், அன்பு கூராமல் இருக்க வேண்டும். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால், அவரிடத்தில் தேவன் இல்லையென்று (1 யோ. 2:15) யோவான் நம்மை கண்டித்து அறிவுறுத்துகிறார். எனவே நாம் உலகத்திலே அன்பு கூராமல் நாம் தியானித்தவைகளில் நீடித்திருக்க வேண்டும். இப்படி செய்வோமானால், அன்புக்கும், சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் தாமே நம்மோடிருப்பார். ஆமென். - முற்றிற்று.

## வேத அறிவுப்போட்டி எண் 38ல் வெற்றிபெற்றவர்கள்

1. P. மகாலிங்கம் - கப்பலூர்
2. P.அலீஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
3. Mrs. கிரேஸ்லூயிஸ் - நிலக்கோட்டை
4. C.அன்புராஜ் - K. கீரனூர்
5. K. பிரஜிதா - ஈரோடு
6. S. தண்டபாணி - சிலுவத்தூர்
7. P.M. சம்மா - அரக்கோணம்
8. R. கலாவதிராஜா - P.சத்திரப்பட்டி
9. R. பாரதி - கோபி
10. P.S. லலிதாபிரேமகுமாரி - மதுரை
11. Mrs. ஜாஸ்மின்வின்சென்ட்ராஜ் - மதுரை.
12. G.P. ஏசையன்ராஜ் - கோபி
13. S. சாமுவேல் - மூனூர்
14. J.S. நிர்மலாராஜன் - மதுரை
15. Mrs. வனிதாசாமுவேல் -
16. Mrs. செல்லமணி ஆறுமுகம் - Y. ஒத்தக்கடை
17. ஷேக்ஸ்பியர் - சிலுவத்தூர்
18. R. பிளசன் - கன்னியாகுமரி
19. S. ஆனந்தராஜ் - ஈரோடு
20. A. சேவியர் மேரி - மதுரை
21. Dr. G. ஜெயசிங் - சென்னை
22. Sis. வசந்தி - புதுபாளையம்.
23. A. ரெபேக்காள் - மதுரை
24. D. எஸ்தர்இவாஞ்சலின் - முட்டைக்காடு
25. P. ஜெயராணி - நாகர்கோவில்
26. S. சரவணபவன் - ஒசூர்
27. A. கந்தசாமி - தெக்கலூர்
28. A. முத்து - பொங்கலூர்
29. Mrs. புனிதாசரவணன் - ஒசூர்
30. Mrs. குளோரிபவுல்சர் - சென்னை
31. S. ராஜபிரசாத் - மதுரை
32. P.M. சத்தியவாசகன் - சேலம்
33. R. செந்தில்குமார் - திடுமல்
34. S.R. பெரியசாமி - சாணார்பாளையம்
35. T. வேலுச்சாமி - ஜோடர்பாளையம்
36. K. தங்கவேல் - மூலனூர்
37. P. கந்தசாமி - K. கீரனூர்
38. S. அகிலாசுந்தரம் - நன்கவல்லி
39. T. சத்தியசீலன் - மலையடிபட்டி
40. S. காமாட்சி - சமத்துவபுரம்
41. Mrs. எஸ்தர்சேகர் - கோபி
42. Mrs. ஜெயந்திநோயல் - சேலம்
43. N. பொன்னி - மதுரை
44. V. சரவணன் - கோவை
45. N. கமலவேணி கண்ணையன் - சென்னை
46. S. இருதயநாதன் - செட்டிபாளையம்
47. D. சமாதான ராஜா - செட்டிபாளையம்
48. D. ஏசுதாஸ் - சித்தூர் (A.P.)
49. Mr. கோவலன் - மதுரை
50. C. பிரவீன் - செட்டிபாளையம்
51. B.S. டேனியல் - செட்டிபாளையம்
52. N. ஜேம்ஸ் - செட்டிபாளையம்
53. L. மனசேமண்ணு - சித்தூர் (A.P.)
54. Mrs. எஸ்தர்மேரி மோகன் - கேத்தி
55. K. சாந்தி - M. வாடிப்பட்டி
56. A. ஜோதிகாந்தம் - போடபாறை

# சந்திப்போம்-சிந்திப்போம்

உரையாடல் – 15 **D. எபிநேசர்**

*தாவீது* : வாப்பா யோனத்தான் வந்து உட்காரு. கிறிஸ்துவை இரகசியமாய் பின்பற்றக் கூடாதான்னு கேட்டிருந்தே இல்லையா?

*யோனத்தான்* : ஆமாம்ப்பா! கிறிஸ்தவங்களானவுடனே அரசாங்க சலுகைகளை கட் பண்ணிடறாங்க. இப்ப மதமாற்றத் தடைச் சட்டமெல்லாம் போட்டிருக்காங்க. சிலர் அடிக்கடி வந்து மிரட்டிட்டு போறாங்க. இதையெல்லாம் பார்த்தா பயமாயிருக்குப்பா! அதனால தான் இரகசியமா ஏத்துக்கலாமான்னு கேட்டேன்.

*தாவீது* : இரகசியமா பின்பற்ற கிறிஸ்தவ மார்க்கம் ஒரு பயங்கரவாத இயக்கமல்ல. தேசத்துக்கோ, சமுதாயத்துக்கோ, எந்தத் தீங்கும் செய்யறதில்லே. அதுக்கு பதிலா நன்மைகள் செய்கிற, நன்மைகளை மட்டுமே செய்கிற மார்க்கமாகத் தான் இந்தியாவுல இதுவரை இருந்துக்கிட்டு இருக்கு. கிறிஸ்து நல்லவர்னு இந்த உலகத்துக்கே தெரியும். அவரை மாதிரியே மாறுகிறவன் தான் கிறிஸ்தவன். அவரை மாதிரியே நம் தேசத்து மக்கள் மாறினா நம்முடைய தேசம் எப்படி இருக்கும்?

*யோனத்தான்* : சொர்க்க பூமியாவில்லே மாறிப்போகும்!

*தாவீது* : அதைத் தான் நாம இப்ப செஞ்சுக்கிட்டு இருக்கிறோம்! அன்பு, சாந்தம், பொறுமை, சகிப்புத்தன்மை இந்த மாதிரி உபதேசங்களைக் கொடுத்துக்கிட்டு இருக்கிறோம். இதப் போயி தடுக்கறாங்களே அதை நினைச்சு அழுகிறதா சிரிக்கிறதான்னே தெரியலே!

*யோனத்தான்* : அப்படீன்னா ஏற்கனவே இருக்கிற மார்க்கங்களாலே அதை சாதிக்க முடியலேங்கிறியா?

*தாவீது* : கண்டிப்பா அது தானே உண்மை! இப்ப ஏற்பட்டிருக்கிற நிலைமைக்கு அவங்க தானே காரணம். ஒருவர் இடிச்சுக்கிட்டு, ஒருவரையொருவர் அடிச்சிக்கிட்டு தேசம் எப்படி சமாதானமா வாழ முடியும்? அவங்களால இந்த தேசத்துக்கு சமாதானம் தர முடியாதுங்கறதுக்கு இதுவே ஒரு பெரிய உதாரணம்.

*யோனத்தான்* : சரி அமெரிக்காவும், இங்கிலாந்தும், இஸ்ரேலும் கிறிஸ்தவ நாடுகள் தானே! அங்கே பயங்கரவாதம் இல்லையா? அங்க இருக்கிறவங்கெல்லாம் சமாதானமா வாழறாங்களா? அவங்க தானே மற்ற சின்ன நாடுகளை தங்கள் ஆயுத பலத்தால் மிரட்டிக்கிட்டு இருக்காங்க!

*தாவீது* : நம்ம விவாதம் வேற ரூட்டுல போகுதுன்னு நினைக்கிறேன். இப்படியே போச்சுனா ஆசிரியர் நம்ம உரையாடலை எடிட் பண்ணிடுவாரு. இருந்தாலும், பரவலா பலபேருக்கு இந்த சந்தேகம் இருக்கிறதாலே இதுக்கு கண்டிப்பா அடுத்த முறை பதில் சொல்றேன்.

(மீண்டும் சந்திப்போம்)

HOSEA **பழைய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள்** ஓசியா

**பொருள்** : பொறுமையுடன் காத்திருக்கும் அன்பின் தேவனிடம் வாருங்கள்

**ஆக்கியோன்:** ஓசியா.

**காலம்** : ஏறக்குறைய 760 - 723 கி.மு.

**திட்டவரைக் குறிப்பு :**

★ கர்த்தருடைய அன்பு எதிர்கால நம்பிக்கையைப் பெறச் செய்கிறது, ஆனால் அவருடைய மன்னிப்பு வரையறைக்குட்பட்டிருக்கிறது (1-3)

★ கர்த்தர் தம்முடைய ஜனங்கள் தம்முடைய உடன்படிக்கையை விசுவாசியாதபடியினால் அவர்களை நியாயந்தீர்க்கிறார் (4 : 1 - 9 : 9)

★ கர்த்தருடைய அன்பு அவிசுவாசமுள்ள ஜனங்களோடு கூட நித்திய உடன்படிக்கையை காத்துக்கொள்ளுகிறது. (9 : 10 - 14 : 9)

**சிறப்புச் செய்தி :**

"இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு; நீ உன் அக்கிரமத்தினால் விழுந்தாய்."

**வரலாற்று பின்னணி :**

தம்மை விட்டு வழிவிலகிப் போன இஸ்ரவேல் மக்களைத் தம்முடைய வழிகளுக்குத் திருப்பும்படி விடாது அழைக்கும் தேவனுடைய இரக்கத்தையும், அன்பையும் எடுத்துக்காட்டுகிறது.

## வேத அறிவுப் போட்டி எண் 38ன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | வஞ்சிக்கப்பட்ட மனம் | - ஏசா.44 : 20 | 6. | கிதியோன் | - நியா.6 : 27 |
| 2. | தாவீது | - சங். 38 : 13 | 7. | முப்பது | - 2 சாமு. 5 : 4 |
| 3. | நீதியினாலே | - ரோ. 5 : 21 | 8. | முப்பது | - லூக். 3: 21-23 |
| 4. | பவுல் | - 2 கொ.13 : 8 | 9. | நித்திய | - நீதி. 10 : 25 |
| 5. | கர்த்தர் | - 1 பேது. 2 : 13 | 10. | நசரேயனாகிய இயேசு | - அப். 10 : 38 |

## ஜெபியுங்கள்

★ வெளிவரவிருக்கும் "ஒரு வழி" தபால் வழி பாடங்களுக்காக....

★ 12வது வாசகர் கருத்தரங்கு சிறப்புடன் நடைபெற்றமைக்காக

★ நாட்டில் ஏற்பட்ட குடிதண்ணீர் பிரச்சனையை கர்த்தர் சந்தித்த படியால் கர்த்தருக்கு நன்றி சொல்லி...



# வேத அறிவுப் போட்டி எண். 39

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பி வைக்க வேண்டும். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். 25 பைசா தபால் கார்டை தவிர்க்கவும்.

Ref.No., உங்கள் பெயர், ஊர் மற்றும் தெளிவான முகவரியுடன் எழுதி அனுப்பவும்.

1. நீர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிவேன் என ஜெபித்த தீர்க்கதரிசி யார்?
2. நீங்கள் நீதிக்கென்று விதை விதையுங்கள்; தயவுக்கொத்ததாய் என்ன செய்யுங்கள்?
3. இராமுழுதும் போஜனம் பண்ணாமலும், கீதவாத்தியம் முதலானவைகளைத் தனக்கு முன்பாக வரவொட்டாமலும் இருந்த ராஜா யார்?
4. மதியீனனுடைய வழி அவன் பார்வைக்கு எப்படியிருக்கும்?
5. இப்போதும், நீ மிருகங்களை கேட்டுப்பார் அவைகள் உனக்குப் போதிக்கும் என்ற தாசன் யார்?
6. கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே எதை உறுதிப்படுத்தினார்?
7. வெளியரங்கமாகாத இரகசியமுமில்லை, அறியப்பட்டு வெளிக்குவராத எதுவுமில்லை?
8. தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷம் தங்கி தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக் கொண்டு உபதேசித்துக் கொண்டிருந்தவன் யார்?
9. கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார் என்றும் யார் யாரைக் குறித்துச் சொல்லுகிறான்?
10. சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு, நாமெல்லாரும் யாருடைய நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்?

# நடப்புச் செய்திகள்

- ★ இந்தியாவில் பயங்கரவாதத்தை பாக்கிஸ்தான் தூண்டி விடுவதற்கான ஆதாரங்கள் உள்ளன என்று இங்கிலாந்து எம்.பி.க்கள் குழு கூறி உள்ளது.
- ★ தமிழ்நாட்டில் மேலும் ஒரு மாவட்டமாக கிருஷ்ணகிரியை தலைமையிடமாகக் கொண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தை உருவாக்க தமிழக அர்சு முடிவு செய்துள்ளது.
- ★ இந்த நூற்றாண்டில் சூரியனில் காந்தப் புயலால் பெரிய கரும்புள்ளிகள் மிகப் பெரிய அளவில் தற்போது தோன்றியுள்ளது என கொடைக்கானல் வானிலை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி ஆலிம் தெரிவித்துள்ளார்.
- ★ சீனா விண்ணுக்கு அனுப்பிய ஷென்ஷோவ் - 5 விண்கலம் பூமியை 21 மணி நேரத்தில் 14 முறை அதன் வட்டப்பாதையில் சுற்றி தரையிறங்கியது. இதில் பயணம் செய்தவர் 38 வயது விண்வெளி வீரர் யாங் லி வெய் ஆவார்.
- ★ ஐதராபாத்தில் நடைபெற்ற ஆப்பிரிக்க - ஆசிய விளையாட்டு போட்டியில் நீச்சல் பந்தயத்தில் 5 பதக்கம் இந்தியாவுக்கு கிடைத்தது.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.




கிறிஸ்துவின் சபை

17.2.102-D/5, ராஜன் நகர், வத்தலக்குண்டு–624 202.
திண்டுக்கல் Dt. ✆ : (04543) 263278

குப்பம்மாள்பட்டி – 624 212. கொடைக்கானல் T.K., திண்டுக்கல் Dt.

7, ஆதிவீராச்சாமி நாயக்கர் சந்து, அரண்மனை தெரு, வடகரை
பெரியகுளம்–626 501, தேனி மாவட்டம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 a.m<br>7.00 a.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon<br>Wed,Thu | 2.00 p.m<br>2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Mon, Tue,<br>Wed, Thu,<br>Fri | 5.30 p.m<br>5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m<br>4.00 p.m | Box. 5540<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |
| PAITE | Sunday | 8.00 p.m<br>8.15 p.m | Box. 56<br>Manipur - 795 128 | KAMLIAN PAO |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th November 2003.

**Monthly Magazine** **FOR FREE DISTRIBUTION ONLY**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.